Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR
CC NO. **434/2020**
**Depostitions of PW- 8 Witness for**

| | |
|---|---|
| Name | கருத்தப்பாண்டி, சார்பு ஆய்வாளர் |
| Father's name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of November 2023.

Signature of Witness.

20.11.2023

எதிரி ஆஜர் .

**முதல் விசாரணை–**

நான் தற்போது சேத்தூர் ஊரக காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 03.02.2020 ம் தேதி திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது 16.30 மணிக்கு நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் கனகராஜ் அவர்கள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த குற்ற எண். 69/2020 பிரிகள் –392 இதச வழக்கு கோப்பிணை எனது விசாரணைக்கு காவல் ஆய்வாளர் அவர்களின் வாய்மொழி உத்தரவின் பேரில் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே சம்பவ இடத்திற்கு 17.15 மணிக்கு சென்று சாட்சிகள் அசோக்குமார், கௌதம் ஆகியோர் முன்னிலையில்

சம்பவ இடத்தினை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்தேன். அன்றைய தினமே வழக்கின் சாட்சிகளான முத்துலட்சுமி, முருகன், சரவணக்குமார், அசோக்குமார், கௌதம், சிறப்பு சார்பு ஆய்வாளர் கனகராஜ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் கோப்பினை காவல் ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். **(வரைபடம். அ.சா. ஆ,. 5 ஆகவும், முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும், குறியீடு செய்யப்படுகிறது.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–**

வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.